**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். 585/2013**

**வழக்கு சாட்சி.8**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **P. தர்மானந்தன்** |
| **தந்தை பெயர்** | **:** | **K.பழனிச்சாமி** |
| **கிராமம்** | **:** | |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **வட்டார போக்குவரத்து அலுவலர்** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **56** |

**21.07.2023**

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2013 ம் தேதி திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணியிலிருந்தபோது திண்டுக்கல் வடக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்படி TN 29 N 0329 என்ற மினி பேருந்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தில் முன் இடது பம்பர் வளைந்து இருந்தது. வாகனத்தின் தடை திறன் நன்றாக இருந்தது. விபத்து வாகனத்தின் எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என ஆய்வு செய்து சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வுச் சான்று அ.சா.ஆ 5 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.)**

**<u>குறுக்கு விசாரணை</u> .**

நான் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று வாகனத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான்.அலுவலகத்திற்கு வாகனத்தை கொண்டுவந்தபின் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வு சான்றில் ஓட்டுனர் காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் விபரங்கள் அனைத்தும் போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் போலீசார் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததன் அடிப்படையிலேயே மோட்டார் வாகன ஆய்வு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரபிமன்யுதான் வாகனத்தை ஓட்டிவந்தாரா என்று நான்

நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.07.31 17:21:58 +0530

Judicial Magistrate No.II
Dindigul.